வாக்குமூலம்

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். 77 / 2019**

**வழக்கு சாட்சி. 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரபாகரன் |
| தந்தை பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | இந்திரா நகர், திண்டுக்கல் |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | கூலி |
| சமயம் | : | |
| வயது | : | **58** |

**26.07. 2023**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்**

முதல் விசாரணை

1. நான் தற்போது திண்டுக்கல் இந்திரா நகரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 29.10.2017ம் தேதி மதியம் 3.30 மணியளவில் ஒரு சுமோ காரில் வத்தலகுண்டு பைபாஸ் அருகில் உள்ள ஒரு கோவில் அருகே வந்தார்கள். நாங்கள் அங்கு கூலி வேலைக்காக நானும், ஜெயமுருகனும் சென்றிருந்தோம். அங்கே ரயில்வே போலீசார் அந்த முகவரியை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். விசாரித்ததற்கு சாட்சியாக இருக்கும்படி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள்.

2. நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. **(அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ ஆக குறீயீடு செய்யப்படுகிறது.)** என் முன்னிலையில் போலீசார் விசாரித்த நபர்களை நான் பார்த்தால் அடையாளம் காட்ட இயலாது.

அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 29.10.2017ம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு தானும் தனது நண்பரும் வத்தலக்குண்டுக்கு கூலி வேலைக்குச் சென்றுகொண்டிருந்ததாகவும், வத்தலகுண்டு பைபாசில் உள்ள கந்தசாமி கோவிலில் சாமி கும்பிடுவதற்காக இறங்கியபோது அங்கு டாடா சுமோ வாகனத்தில் வந்த 3 பேர் பேசிக் கொண்டு இருந்தார்கள். அந்த நபர்களிடம் ரயில்வே காவல் ஆய்வாளர்

விசாரிக்க அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் அவர்கள் TN 57 B 9393 என்ற டாடா சுமோ வாகனத்தை ஆஜர் செய்தார்கள் என்றும் அதற்கு அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.08.01 13:42:51 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

வாக்குமூலம்

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். 77 / 2019**

**வழக்கு சாட்சி. 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | : | கருப்பணன் |
| கிராமம் | : | திண்டுக்கல் |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | த.கா. (தாலுகா காவல் நிலையம்) |
| சமயம் | : | |
| வயது | : | **47** |

**26.07. 2023**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.10.2017ம் தேதி திண்டுக்கல் இருப்பு பாதை காவல் நிலையத்திற்கு இரவு 20.15 மணிக்கு நான் பணிக்கு வந்தபோது நிலைய எழுத்தரான திரு. பாஸ்கரன், தலைமைக்காவலர் எண். 68 என்பவர் திண்டுக்கல் மாவட்டம் தலைமை அரசு மருத்துவமனையில் திண்டுக்கல் இருப்பு பாதை எல்லைக்குட்பட்ட சங்கிலி கேட்டில் கேட் கீப்பராக பணி புரிந்து வந்தார்.

2. திரு. ஆனந்த பாபு என்பவர் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவரை அரசு மருத்துவமனைக்குச் சென்று விசாரித்தும் வாக்குமூலம் பெற்றும் வருமாறு உத்தரவிட்டார்.

3. அதன்பேரில் நான் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்குச் சென்று AR Copy 1115703 யைப் பெற்றும், அதன்பிறகு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவரும் திரு. ஆனந்தபாபு என்பவரை விசாரித்தேன். அவர் ஏற்கனவே எழுதி வைத்திருந்த மனுவை என்னிடம் கொடுத்தார். அந்த மனுவைப் பெற்று நிலையம் வந்து நிலைய பொறுப்பில் இருந்த திரு. பாஸ்கரன் தலைமைக்காவலர் எண். 68 என்பவரிடம் கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

தலைமைக்காவலர் பாஸ்கரன் எழுத்து பூர்வமாக அரசு தலைமை மருத்துவமனைக்குச் செல்ல உத்தரவு எதும் போடவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாகக் கூறினார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஆனந்த பாபுவிற்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டிருந்தது என்று ஆய்வளரிடம் நான் கூறவில்லை என்றால் சரிதான். ஆனந்தபாபு என்னிடம் கொடுத்த புகார் மனுவை யார், எங்கு, எப்போது எழுதினார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது.

ஆனந்த பாபுவிடம் நான் மனுவைப் பெற்றபோது நான் அதில் எந்த மேற்குறிப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.08.01 13:43:00 +0530

Judicial Magistrate No.II
Dindigul.